# கதிர்காமம்

கந்த பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்ருன
கதிர்காம க்ஷேத்திரத்தைப் பற்றிய விவரங்கள்.

இலங்கை அரசாங்க சபை அங்கத்தினரும் கணக்குப் பதிவு
நூல், வியாபாரப் பயிற்சி நூல், அழகிய இலங்கை
முதலிய பல நூல்களின் ஆசிரியருமான
கோ. நடேசய்யர்
இயற்றியது.

கோ. நடேசய்யர்
ஆசிரியர் பதிப்பாளர்

வளவனூர்—கொழும்பு
(தென் இந்தியா)

[ரு. 1—4—0

முதற் பதிப்பு 1946

சகல உரிமைகளும் ஆசிரியருக்கே.

புஸ்தகம் கிடைக்கும் இடம்:

இந்தியாவில் :—

கோ. நடேசய்யர்

ஆசிரியர் - பிரசுரதார்

வளவனூர் - (தென் ஆர்க்காடு)

---

இலங்கையில் :—

கோ. நடேசய்யர்

ஆசிரியர்-பிரசுரதார்

293-15, ஜம்பட்டா தெரு,

கொழும்பு.

Printed at the B. N. K. Press, Madras. (Q. H. No. MS. 100/B)

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முகவுரை .... .... | 1 |
| 1. | பிரயாணமுறை .... .... | 4 |
| 2. | கதிர்காம சரித்திரம் .... .... | 10 |
| 3. | கதிர்காமமும் - புராணங்களும் .... | 20 |
| 4. | கல்யாணகிரியும் அவரது பிற்காலமும் | 25 |
| 5. | தற்கால நிலை .... .... | 31 |
| 6. | கதிர்காமமும் - முஸ்லீம்களும் .... | 38 |
| 7. | அருணகிரிநாதர் திருப்புகழ் .... | 41 |

# முகவுரை

கதிர்காம க்ஷேத்திரத்தைப் பற்றித் தமிழ்நாட்டில் கேள்விப் படாதார் இருக்கமாட்டார்கள். வட நாட்டிலும் இந்த க்ஷேத் திரத்தின் பெருமை அநேகருக்குத் தெரியும். தேவர்களின் சேனாதிபதியாக விளங்கிய சுப்பிரமணியக் கடவுளுடைய ஆறு படைவீடுகளில் இதுவும் ஒன்றென்று கொண்டாடுவார்கள். அருணகிரிநாதர் இலங்கைக்கு வந்து கதிர்காமம் தரிசித்து, திருப்புகழ் பாடியிருப்பதாகவும் தெரிகிறது.

அநேக தமிழர்கள் கதிர்காமத்தைப் பற்றிக் கேள்விப்பட் டிருப்பார்களேயல்லாது போய்த் தரிசித்தவர் மிகக்குறைவுதான் எனக் கூறவேண்டும். கதிர்காமத்தில் நடப்பதாகச் சொல்லும் அதிசயங்கள் பலவற்றைத் தென் இந்தியாவில் கேள்விப்பட்டிருக் கிறோம். இத்திருக்கோயில் கடலோரம் உள்ளதென்றும், பக்தர் கள் தாங்கள் கொண்டுபோகும் தேங்காய் பழம் முதலியவற்றை அங்கு சந்நிதியில் உள்ள ஒரு சிறு வண்டியில் வைத்து உள்ளே தள்ளுவார்கள் என்றும், அவ்வாறு உள்ளே சென்ற வண்டி தானாகத் திரும்ப வருங்காலத்தில் தேங்காய் உடைக்கப்பட்டும், கற்பூரம் கொளுத்தப்பெற்றும் இருக்கும் என்றும், அப்பிரசாதங் களை பக்தர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லி யதை நானே கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வித நடைமுறை கள் யாதொன்றுமில்லை.

கதிர்காமம் போய்வருவது மிகச் சிரமமான காரியம். அதுவும் நல்ல ரஸ்தாக்கள் இல்லாத காலத்தில் யானை புலிகள் அடர்ந்த காட்டினிடையேயுள்ள ஒரு கோவிலுக்குப் போவது கஷ்டந்தான். சுமார் 30 வருஷ காலங்களுக்கு முன் வரையில் கவர்ன்மெண்டில் லைசன்ஸ் பெற்றுத்தான் போகவேண்டும் என்ற சட்டம் இருந்தது. அக் காலத்தில் கதிர்காமம் என்பது (சுமார் 60-65 வருஷங்களுக்கு முன்) ஆண் பெண் குழந்தைகள் உள்பட

40 பேர் கொண்ட கிராமம். இச் சிறு கிராமத்தில் ஆயிரக்கணக்கானவர் திடீர் எனப் போனால் சாப்பாட்டு வசதி, தண்ணீர் வசதி, பாதுகாப்பு வசதியிராது என்பது கண்டு மேற்கூறியவாறு தடை வைத்திருந்தார்கள். அதுமாத்திர மல்ல. அப்பகுதி மலைக் காய்ச்சல் அதிகம் உள்ள இடம். கால்ரா முதலிய நோய்கள் ஏற்பட இடமிருந்தது. ஏனெனில் தண்ணீர் வசதி கிடையாது. ஆடிமாத காலத்தில் மாணிக்க கங்கையென்ற ஆற்றில் தண்ணீர் கிடையாது. இதற்காக உற்சவகாலத்தில் வைத்திய வசதி, போலீஸ் பாதுகாப்பு; போக்குவரத்துக்காக காடுகளை சீர்திருத்தம் செய்தல், சுகாதார வசதி தேவையானல் மாணிக்க கங்கையில் தண்ணீர் கொண்டுசேர்த்தல் முதலியவற்றை அரசினர் இன்றைக்கும் செய்துகொண்டு வருகிருர்கள்.

முற்காலத்தில் கதிர்காம க்ஷேத்திரம் போனவர்களில் பெரும்பாலோர் காட்டுக் காய்ச்சல்—மலைக் காய்ச்சலால்—அவதிப்படாதவர் இல்லை. பாதிக்குமேல் இறந்தும் இருப்பார்கள். இக்காரணங்கள் பற்றியே கதிர்காமம் போவதற்கு அநேகருக்குப் பயம். மேலே கூறிய கஷ்டங்கள் தற்காலத்தில் இல்லை எனலாம். நல்ல பாதைகள் உண்டு. போக்குவரத்து சாதனங்கள் ரயில் மார்க்கமாகவும், பஸ்கள் மார்க்கமாகவும் இருக்கின்றன. வசதியுள்ளவர்கள் காரில் பிரயாணம் செய்தால்—உற்சவ காலத்தில் கூட்டமாய் உள்ள நாட்கள் தவிர, மற்ற நாட்களில்—கோவில் வரையில் போக வசதியுண்டு.

கதிர்காம க்ஷேத்திரம் காட்டிலுள்ள ஒரு சிற்றூர். கூட கோபுரங்கள், மாடமாளிகைகள் என்பன கிடையா. கோவில்களுங்கூட தென் இந்தியக் கோவில்கள்போல் பெரியதாகவும் ஆடம்பர முள்ளதாகவும் இல்லை. எனினும், வருஷா வருஷம் இந்த ஸ்தலத்திற்கு வந்துபோகும் ஜனங்களின் எண்ணிக்கையைக் கவனிக்கையிலும், அந்த க்ஷேத்திரத்தில் மக்கள் பரவசப்பட்டு நடந்துகொள்ளும் முறையைக் கவனிக்கையிலும் அவ்விடத்தில் ஒரு 'சக்தி' இருக்கிறதென்றே எண்ணவேண்டும்.

கதிர்காமக் கடவுளைக் கண்டு தரிசிக்கவெண்ணும் தமிழர்களுக்கெனவே இப்புஸ்தகம் வெளியிட எண்ணினேன். கதிர்-

காமத்தின் சரித்திரச் சுருக்கம், புராண வரலாறு, வாய்மொழியாக வந்துள்ள பல விவரங்கள் முதலியவற்றை இதில் காணலாம்.

கதிர்காமத்தில் தற்காலம் அமைந்துள்ள கட்டிடங்கள், கோவில்கள் முதலியவற்றின் படங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. தமிழன்பர்கள் அதிகமாக வந்து கந்தபெருமானைத் தரிசித்து அவருடைய அருள் பெறுவார்களாக.

கொழும்பு<br>28—6—46

**கோ. நடேசய்யர்.**

அத்தியாயம் 1

# பிரயாண முறை

இந்தியாவிலிருந்து கதிர்காமம் பார்க்க வரவெண்ணு வோர் பல விஷயங்களைக் கவனிக்கவேண்டும். எக்காலத் தில் எப்படிப் பிரயாணம் செய்யலாம் என்பது முதலாவது. க்ஷேத்திரங்களுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்ய நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டியதில்லைதான். ஆனால், ஒவ்வோர் க்ஷேத்திரத்திற்கும் பிரதான நாட்களுண்டு. அவ்விதமான பிரதான நாட்களுள் "ஆடிப் பௌர்ணமை" திருநாளும், கார்த்திகை மாதம் வரும் "தீபமும்" கதிர் காமத்தில் முக்கியமானவை. பின் சொன்ன திருவிழாவை விட முன் சொல்லிய திருவிழாவிற்குத்தான் கூட்டம் அதிகமுண்டு. முக்கிய காரணம், மழை யிராது. போக்கு வரத்து வசதிகள் உண்டு. மலைக்காய்ச்சல் தொந்தரவு குறைவு. இவ்விரண்டையும் தவிர புது வருஷப்பிறப்பு, மாசிமகம், வைகாச விசாகம், மகரசங்கராந்தி முதலிய நாட்களும் முக்கிய மானவைதான். இந்துக்கள்தான் 100க்கு 75 பாகம் தரிசனத்துக்கு வருபவர். பாக்கியுள்ளவர் புத்த மதச் சிங்களவர்கள்.

இவ்வூருக்கு முஸ்லீம்களும் வருகிறார்கள். இவ்விடத் தில் முஸ்லீம்பெரியார் அடக்கமாயிருப்பதாகச் சொல்லு கிறார்கள். வள்ளியம்மன் கோவிலுக்கருகில் ஓர் சமாதியும் உண்டு. இலங்கை முஸ்லிம்களைவிட இந்திய முஸ்லிம்கள் தான் இந்த ஸ்தலத்திற்கு அதிகம் வருவதைக் காணலாம்.

கார்த்திகை மாத காலத்தில் இப் பகுதியில் மழை யதிகம். திஸ்ஸமாராமையிலிருந்து சுமார் 13 மைல் தூரம்

சேற்றில் நடக்கும்படி ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும். நல்ல ரஸ்தாக்கள் போடப்பட்டு வருகின்றன. அவை முடிவு பெற்றால் நலமே. கதிர்காமத்திற்கு நல்ல ரஸ்தாக்கள் போட்டு க்ஷேத்திரத்தின் பெருமையைக் கெடுத்து விடக் கூடாது என்று சொல்லுவோரும் உளர்.

இந்தியாவிலிருந்து வரும் பக்தர்கள் ஆடி மாதத்தில் வருவது நலம். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் பிரயாணிகள் கவனிக்கவேண்டிய பல சட்டதிட்டங்கள் உண்டு. அவற்றைக் கவனித்தால்தான் இலங்கையில் கால் வைக்க முடியும். சில சட்டதிட்டங்கள் இந்தியா கவர்ன்மெண்டாருடையது. சில இலங்கைக் கவர்ன்மெண்டாருடையது. இந்தியா கவர்ன்மெண்டாருடைய கட்டுப்பாடு சில வருஷகாலமாகத்தானுண்டு. இந்தியத் தொழிலாளர் சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தொழிலாளர் போகப்படாதென்ற கட்டுப்பாடு இருந்து வருகிறது. "புரொடெக்டர் ஆப் எமிக்ரண்ட்ஸ்" (Protector of Emigrants) என்றோர் உத்தியோகஸ்தர் மண்டபம் காம்பில் (Mandapam Camp) இருக்கிறார். அவருடைய அனுமதிச் சீட்டில்லாமல் ஒருவரும் கப்பல் ஏற முடியாது. போகிறவர் எக்காரணத்திற்காகப் போகிறார், உத்தியோகம் தேடிப் போகிறாரா, அல்லது கூலி வேலை செய்யப் போகிறாரா, அல்லது ஊர் பார்க்கப் போகிறாரா என்ற விஷயத்தை இவ்வுத்தியோகஸ்தர் விசாரிப்பார். தாங்கள் உத்தியோகம் தேடியோ, அல்லது கூலி வேலை தேடியோ போகவில்லையென்பதை நிரூபிக்க வேண்டியது பிரயாணிகளின் கடமை.

தாங்கள் கிளம்பும் கிராமதிகாரிகளிட மிருந்தோ, அல்லது வேறு தக்க மனிதர்களிடமிருந்தோ தங்களைப் பற்றிய விவரமான கடிதம் கொண்டு வந்திருந்தால் யாதொரு சிரமமும் இராது.

இரண்டாவதாகக் கவனிக்கவேண்டியது இலங்கை அரசினருடைய விதிகள். இந்தியாவில் பல பாகங்களிலும் கால்ரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் அதிகம் என்பதும், அவ்வியாதிகள் இலங்கைக்குப் பிரயாணிகள் மூலமாகவே கொண்டு வரப்படுகிறதென்பதும் இலங்கை அரசினருடைய அபிப்பிராயம். இக் காரணம்பற்றியே இந்தியா பக்கத்தில் மண்டபம் காம்ப் என்று ஒரு ஸ்தாபனம் இலங்கை அரசினரால் ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. இலங்கை அரசினரைச் சேர்ந்த டாக்டர்கள் இந்த இடத்தில் இருக்கிறார்கள். இந்தியாவில் எந்தெந்தப் பகுதிகளில் தொத்து வியாதிகள் உண்டென்பது பற்றிய தந்தி தினந்தோறும் அவர்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. எந்தெந்தப் பகுதிகளிலிருந்து வருகிறவர்களை எப்படிச் சோதனைசெய்தனுப்பவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சாதாரணமாக மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்பவர்கள் பலவகைப் பட்டவர்களாக இருப்பார்களாகையால் அவர்களை மண்டபம் காம்பில் இறக்கிவிடுவார்கள். அப் பிரயாணிகள் காம்பில் தங்கி, அம்மை குத்திக்கொண்டும், துணிமணிகளை அவித்துக்கொண்டும் போகும்படிச் செய்வார்கள். மூன்றும் வகுப்புப் பிரயாணிகளோ மற்றவர்களோ காம்பில் 6 நாள் தங்கிப்போக வசதியுண்டு. தனித்திருந்துபோகப் பிரியப்படுகிறவர்கள் பிரத்தியேகமான இடம் வாடகைக்கு வாங்கிக்கொள்ளலாம். பிரத்தியேகமாகச் சமையல் செய்துகொள்ளவும் கூடும். அப்படியில்லாதவர் பொது விடுதியில் தங்கவோ, அல்லது பொதுச்சாப்பாடு சாப்பிடவோ கூடும். பிராமணர்களுக்கும், முஸ்லீம்களுக்கும், மற்றவர்களுக்கும் பிரத்தியேகமான சாப்பாட்டுக்கு வசதி செய்து கொடுக்கப்பெற்றிருக்கிறது.

மண்டபம் காம்பில் 6 நாள் தங்காமல் ஒரு நாள் மாத்திரம் தங்கிப் போகவெண்ணும் 2ம் வகுப்புப்பிரயாணி

கள் கவனிக்கவேண்டியன இரண்டுண்டு. அவர்களுக்கு இலங்கையில் நண்பர்கள் இருந்தால் அவர்களால் கொடுக்கப்பெற்ற ஒப்பந்த அனுமதிச்சீட்டுப் பெற்றிருக்க வேண்டும். 1 வருஷ காலத்திற்குள் அம்மைக் குத்தப் பெற்றதாக சாட்சிப்பத்திரம் இருக்கவேண்டும். குறிப்பிட்ட பிரயாணி தங்களிடம் வருவதாகவும், அப்படி அவர் வர அனுமதிக்கப்பட்டால் அவர்கள் குவாரண்டைன் விதிகள் (Quarantine Regulations—வியாதித் தடுப்பு விதிகள்) பிரகாரம் 14 நாள் கொழும்பிலோ அல்லது பிற விடங்களிலோ, அதற்காக உள்ள சுகாதார அதிகாரியிடம் கைக்காட்டுவார்கள் என்றும், அவ்விதம் கைக்காட்டா விட்டால், தாங்கள் அவர்களுக்காக 50 ரூபாய் வரை ஜாமீனாக விருப்பதாக இலங்கையில் உள்ள நண்பர் எழுதிக் கொடுத்தால், இலங்கையிலுள்ள அதிகாரி ஒரு அனுமதிச் சீட்டு கொடுப்பார். அந்த அனுமதிச்சீட்டை இலங்கையிலுள்ளவர் இந்தியாவிலிருந்துவரும் நண்பருக்கு அனுப்ப, அவர் அதைக்கொண்டுவந்து மண்டபம் காம்பு அதிகாரியிடம் காட்டவேண்டும். இவ்வாறு ஒப்பந்த அனுமதிச் சீட்டு தபாலில் அனுப்பி வர நாள் இல்லாவிட்டால் கொழும்பிலிருந்து தந்திமூலம் மண்டபம் காம்பு அதிகாரிக்கு அந்த அனுமதிச்சீட்டு அனுப்பிவைக்கலாம். மண்டபத்தில் 6 நாள் தங்கிப்போகும் பிரயாணிகள் இலங்கையிலுள்ள சுகாதார அதிகாரியிடம் 14 நாள் கைக்காட்ட வேண்டிய அவசியமிராது.

இலங்கையிலிருந்து ஒப்பந்த அனுமதிச்சீட்டு அனுப்ப நண்பர் இல்லாதவர்கள் என்ன செய்யலாம்? அவர்கள் மண்டபம் காம்பில் 6 நாள் தங்கி வரலாம். அல்லது மண்டபம் அதிகாரிகளிடத்தில் ரூ. 50க்கு மேற்படாத தொகை கட்டி ஒரு ஒப்பந்தமும் எழுதிக்கொடுத்து வரலாம். அவ்வாறு ஒப்பந்தம் கொடுத்துவந்து விதிகளின் பிரகாரம் 14 நாள் இலங்கையில் அதிகாரிகளிடம் கைக் காட்டிவிட்டால், பிறகு மண்டபம் காம்பில் கட்டிய

தொகையை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெறலாம். மூன்றும் வகுப்பில் அல்லாமல் இரண்டாம் அல்லது முதலாம் வகுப்பில் வருகிறவர்களை அநேகமாய் மண்டபத்தில் இறக்கமாட்டார்கள். அவர்கள் வரும் பகுதியில் தொத்துநோய் இருப்பதாகத் தந்தி வந்திருந் தால் காம்பில் இறக்கிவிடுவார்கள். இரண்டாம், முத லாம் வகுப்பில் வருகிறவர்களும் இலங்கையிலிருந்து அனு மதிச்சீட்டு கொண்டு வருவது நலம். இல்லாவிட்டால் ரொக்கம் கட்டி வரலாம்.

மேலே கூறிய இரண்டு அதிகாரிகளிடமிருந்தும் அனு மதிச்சீட்டுப் பெற்று கப்பலில் வந்ததும், அங்கு இலங் கைப் போலீஸ் அதிகாரிகள் விசாரணை யேற்படும். அதா வது, இலங்கையில் முன்பின் அறியாமல் வேலை தேடிப் போய் கைப்பணம் செலவாகி அந்த நாட்டில் பிச்சை வாங்கும் கதிக்குள்ளாகக் கூடாது என்ற முறையில், போகும் பிரயாணியிடம் போதிய பணம் இருக்கிறதா என்பதை விசாரிப்பார்கள். 3-வது வகுப்பு பிரயாணி ரூ. 150/-ம், 2-வது வகுப்பு பிரயாணி ரூ. 250/-ம் கையில் வைத்திருக்க வேண்டும் என்பார்கள். இச்சட்டத்தை அர சியல் விஷயத்தில் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். வருகிற பிரயாணி நடந்துகொள்வதைப் பொறுத்து எல் லாம் இருக்கிறது. கதிர்காமம் போகிறவர்கள், அல்லது வேறு காரியமாகப் போகிறவர்கள் என்பதை நிரூபிக்கக் கூடிய முறையில் பிரயாணியிருந்தால் யாதொரு விதமான சிரமமும் இருக்காது.

இம்மூன்று பேர்களிடமிருந்து தப்பிக்கொண்டு இலங்கைக்கரை வந்து விட்டால் பிறகு யாதொரு சிரமும் இல்லை.

கதிர்காமம் வர எண்ணுபவர்கள் கொழும்பில் இறங் குவது நலம். அங்கு எல்லா வசதிகளும் உண்டு. இறங்கி யதும், அன்றையதினமே குவாரண்டைன் அதிகாரியிடம்

போய்க் கைக்காட்டி விட்டுத், தாங்கள் எந்த ஊர் போகிறோம் என்பதைச் சொல்லிவிட்டு வந்து விடுவது நலம்.

கொழும்பில் அவரவர்கள் இஷ்டப்பிரகாரமும், அந்தஸ்திற்குத் தக்கவிதமும் தங்கிப் போக ஹோட்டல் வசதிகள் உண்டு. சொந்தத்தில் தனிக்கார் வைத்துக்கொண்டு போவதானல் 200 மைல் போக வேண்டியிருக்கும். தற்கால நிலையில் செலவு அதிகமாகும். ரயில் மார்க்கம் போவதானல் மாத்தரை என்ற இடம் வரை (சுமார் 100 மைல்) ரயிலில் போய் அங்கிருந்து பஸ்ஸில் போகலாம். அல்லது கொழும்பிலிருந்து திஸ்ஸமாராமை வரையில் நேரடியாகப் பஸ்கள் போகின்றன. அவற்றில் போவது நலம். கூட்டமாக வந்தால் முன் கூட்டியே பஸ் கம்பெனியாருடன் பேசி முடிவுசெய்து கொள்ளலாம். எப்படிப் போவதானலும், திஸ்ஸமாராமை வந்து, அங்கிருந்து காட்டுப்பாதை வழியாக நடந்து போகவேண்டும். காட்டுப்பாதை சுமார் 12 மைல் அல்லது 13 மைல் இருக்கும். காட்டுப்பாதையில் கார் போகக்கூடிய வசதிகள் இப்பொழுது செய்து கொண்டு வருகிறார்கள். இரட்டைமாட்டு வண்டிகளும் திஸ்ஸமாராமையில் கிடைக்கும். காட்டுப்பாதையில் நடந்து போவதில் சிரமமும் இராது. பயமும் இல்லை. காட்டு மிருகங்கள் உண்டெனினும் அவற்ருல் அபாயம் ஏற்பட்டதில்லை.

கதிர்காமத்தில் ஏராளமான மடங்கள் உண்டு. நகரத்தார்களுடையதும், வேறு பலருடைய மடங்களும் உண்டு. எங்கும் தங்கிப் போகலாம். யாதொரு கஷ்டமும் இருக்காது.

கதிர்காமத்தில் இரண்டொரு நாள் தங்குவதானல், செல்லக்கதிர்காமம், கதிரமலை முதலிய விடங்களுக்கும் போய்வரலாம். உற்சவகாலங்களில் ஏராளமான ஜனங்கள் கால் நடையாகப் போய்வருவதைக் காணலாம். சிரமம் ஒன்றும் இல்லை.

அத்தியாயம் 2

# கதிர்காம சரித்திரம்

இலங்கையில், ஊவைமாகாணத்தின் தென் கோடியில் கதிர்காமம் உள்ளது. "பாலி"பாஷையில் இதற்கு "கஜர காமம்" என்று பெயர். "கார்த்திகேயகாமம்" என்றது "கதிர் காமம்" என்று திரிபுற்றது என்பாரும் உளர். "கதிர்" என்றால் "சுடர்" "ஒளி" என்று பொருள். அருணகிரி நாதர் போன்ற அடியார்களுக்குச் சுடராக நின்று காட்சியளித்ததால் "கதிர்காமம்" என்று பெயர் வந்தது என்று சொல்லுவதும் பொருந்தும்.

புத்த மதத்தினருக்கும் சரி, இந்து மதத்தினருக்கும் சரி இது ஓர் புனிதமான க்ஷேத்திரம். புத்த பகவான் "போதிஞானம்" அடைந்த பிறகு இலங்கைக்கு வந்து 16 இடங்களில் நிஷ்டையில் இருந்தார் என்றும், அவ்விதம் நிஷ்டையில் இருந்த 16 இடங்களில் இதுவும் ஒன்று எனச் சொல்லப்படுகிறது. அவ்வாறு நிஷ்டையில்-இருந்த பாக்கி யுள்ள 15 இடங்களும் பின்வருமாறு.


(1) மையாங்கனை அல்லது பிந்தன்னை (2) நாகதீபம் (3) களனி (4) ஸ்ரீபாதமலை (5) திவகுஹா (6) திகவாபி (7) முத்தியாங்கனை (8) திஸ்ஸமஹாவிஹார (9) அனுராதபுரத்தில் வெள்ளரசு (10) மிரிச வேத்திய (11) ருவான்வெலிஸாய (12) தூபராம (13) அபயகிரி (14) ஜெத்வன ராம (15) செலசேத்தியா முதலியன.

ஊவை மாகாணம் என்பது முற்காலத்தில் அரச குமாரரால் ஆளப்பட்டு வந்த இடம். வெகு காலமாகவே இப்பகுதியில் பராக்கிரமத்துடன் சிங்களவர் ஆட்சி செலுத்தி வந்திருக்கிறார்கள். என்பது வெளிப்படை. அசோக மன்னர் புத்தமதப் பிரசாரம் செய்ய தன் மகன்



Copy right Govt. Tourist Bureau

கதிர்காமம்—பெரிய கோவிலுக்குள் நுழைய வாயிற்படி



Copy right Govt. Tourist Bureau

கதிர்காமம் உட்பிராகாரத்தில் சுவாமி சந்நிதி எதிரில்
பக்தர்கள் வேண்டிநிற்றல்

மஹிந்தனையும், மகள் சங்கமித்தவையும் இலங்கைக்கு அனுப்பி வைத்தார் என்பது சரித்திர உண்மை. அக்காலத்தில் அனுராதபுரத்தை யாண்டது "தேவ நம்பிய திஸ்ஸா" என்ற அரசர். அசோக மன்னரின் மகனும் மகளும் இலங்கைக்கு வருகிறார்கள் என்ற நற்செய்தியைக் கேட்டு, இலங்கையில் அக்காலத்தில் முக்கியஸ்தர்களாயிருந்தவர்களுக்கு அழைப்பு அனுப்பியிருந்தார். அவ்வாறு அழைப்பு அனுப்பப்பட்டவர்களில் (1) "கஜரகாமத்து அரச குமாரன்" (2) கந்தன காமத்து அரசகுமாரன் (3) தீவக்க என்னும் பிராமணனும் பிரதானமானவர்கள்.

மஹிந்தா, சங்கமித்த அம்மையார், அவருடைய பரிவாரங்கள், அவ்வூர் அரசர், அவருடைய குடிகள் இன்னும் மற்றயோரும் அனுராதபுரத்தில் அச்சமயம் கூடியிருந்தார்கள். சங்கமித்த அம்மையார் கொண்டு வந்திருந்த "வெள்ளரசு கிளையில்" ஒரு பக்கத்தில் நன்ருகப் பழுத்த பழம் தென்பட்டு, அப்பழத்தை ஊன்ற தங்கப் பாத்திரம் ஒன்றில் வாசனைத் தைலங்கள் ஊற்றிவைத்து, ஷை கிளையிலிருந்து உதிர்ந்த பழத்தை ஷை பாத்திரத்தில் நடும்படியாக மஹிந்தா, திஸ்ஸா அரசருக்கு ஆக்ஞாபித்தார். அவரும் அவ்விதமே செய்ய, அந்தப் பாத்திரத்தில் வெள்ளரசு செடிகள் 8 உடனே கிளம்பி 4 முழ உயரம் வளர்ந்து நின்றனவாம். அச் செடிகளில் ஒன்றை கஜரகாம அரசகுமாரருக்குக் கொடுக்க, அவரும் அதைக் கொண்டு வந்து கதிர்காமத்தில் பயிர் செய்ததாக மகாவம்சம் கூறுகிறது. இவ்வாறு கிளம்பிய 8 செடிகளில், கதிர்காமத்திற்குக் கொடுத்தது போக, பாக்கி 7-ல் ஒன்றை அனுராதபுரத்திலும், இரண்டாவதை தீவக்க என்னும் பிராமணனுடைய கிராமத்திலும், மூன்ருவதை தூபராமாவிலும், நாலாவதை ஈஸ்வரமனக விஹாரையிலும், ஐந்தாவதை பத்ம சேத்தியாவிலும், ஆருவதை சேத்தியா விஹாரையிலும், ஏழாவதை கந்தனகாமாவிலும் பயிரிடச் செய்ததாகத் தெரிகிறது. இலங்கையில் கி. மு. 3-ம் நூற்றுண்டு காலத்திலேயே கதிர்காமம்

புத்த மதத்தினருடைய புண்ணிய க்ஷேத்திரமாக விளங்கியது என்பது இதனின்றும் தெரிகிறது.

கதிர்காம க்ஷேத்திரம் அக்காலத்தில் க்ஷத்திரிய வம்ச அரசனால் ஆளப்பட்டு வந்துள்ளது. மேலே குறிப்பிடப் பட்ட வெள்ளரசு செடியும் கதிர்காமக்ஷேத்திரத்தில் பெரிய கோவிலின் பின்புறத்தில் வைத்து பயிராக்கப்பெற்றிருக் கிறது. பெரிய கோவிலின் வடபுறத்தில் சுமார் ½ மைல் தூரத்தில் "கிரிவிஹாரை" என்ற டகோபா (புத்தர் கோயில்) ஒன்றுள்ளது. இதுவும் கி. மு. 3-வது நூற்றாண்டு காலத் தியது என்பார்கள். இது சம்பந்தமான கல்வெட்டு சாச னங்கள் அதிகம் இல்லை. மேற் கூறிய டகோபா மகாநாகா என்னும் அரசனால் கட்டப்பட்டது என்பார்கள். இதில் பெரும்பாகம் இடிந்துபோக, சமீபகாலத்திலிருந்து அத னைப் புதுப்பித்து வருகிறார்கள். தேவநம்பிய தீஸ்ஸா வின் சகோதரன் கதிர்காமத்திலிருந்து 10-வது மைலில் மகா காமம் என்றோர் க்ஷேத்திரத்தை யுண்டுபண்ணிய காரணத் தால் கதிர்காமத்தின் பெயர் குறைந்ததென்றும், அதன் காரணத்தால் மகாவம்சம் என்னும் சரித்திரநூலில், 11-ம் நூற்றாண்டு வரையில் கதிர்காமத்தின் பெயர் ஒரே தடவை காணப்படுகிறதென்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள்.

எப்படியாயினும் கதிர்காமம் 11-ம் நூற்றாண்டிற்கு முன்னும் இலங்கையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது என் பதை மறுக்கமுடியாது. சோழமன்னர் அனுராதபுரத் தின்மேல் அடிக்கடி படையெடுத்து வந்ததன் காரணமாய் சிங்களவர்கள் இலங்கையின் தென்பாகத்தில் வந்து குடி யேறி அரசு புரியலானார்கள். அக்காலங்களில் சோழ நாட்டு வீரர்களுக்கும், சிங்கள மன்னர்களுக்கும் அடிக்கடி கதிர்காமத்தின் பக்கங்களிலேயே போர் நடந்து வந்திருக் கிறது. அக்காலத்தில் லோகா என்ற வீரன் சோழ மன்னர் களை தோற்கடித்து ரோஹுண பகுதியை கதிர்காமத்திலின்றும்



Copy right Govt. Archeological Dept.

சூரன்கோட்டையெனத் தமிழர் சொல்லும் கதிர்காமம் பெரிய கோவிலுக்குப் பின் உள்ள கிரிவிஹாரை

ஆண்டுவந்தான் என்று மகா வம்சத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இம் மன்னன் 6 வருஷ காலத்திற்குப் பிறகு இறந்தான். பிந்தன்னையை அக்காலத்தில் ஆண்டுவந்த காச்யப ரோஹணாவையும் பிடித்துத் தன்னாட்சிக்குள்ளாக்கிக்கொண்டான். இதைக் கேட்ட சோழ மன்னன் பொலனருவாவை விட்டுக் கிளம்பி யுத்தத்திற்கு ஆயத்தமாக கஜர காமம் வந்து சேர்ந்தான். கேசதாது என்பவன் சோழர்களை விரட்டியடித்து கதிர்காமத்தில் ஆட்சிபுரியத் தலைப்பட்டான். இதைக்கேட்ட கிட்டி என்னும் ராஜகுமாரன் கேசதாதுவுடன் யுத்தம் செய்து ரோஹணாவைப் பிடித்துக்கொண்டான். பிறகு, சோழ மன்னர்களையும் வென்று பொலனருவாவில் முதலாவது விஜயபாஹு என்ற பெயரால் அரசு செலுத்தலானான்.

சுமார் 2000 வருஷகாலமாகக் கதிர்காமம் பெயர்பெற்றிருந்தபோதிலும், கதிர்காமத்தின் கோவில் தூதுகுமுனு என்னும் அரசனால் கட்டப்பட்டு, நித்திய பூசைக் கடனுக்கு ஏராளமான காணி பூமிகளும் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இக்காலத்தில் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஏலேலசிங்கம் என்னும் தமிழ் அரசன் இலங்கையை ஆண்டு வந்தான். திஸ்ஸமாராமையில் அக்காலத்தில் கவண் திஸ்ஸ என்ற மன்னன் சிற்றரசராக விருந்தான். தமிழர்களை வென்று இலங்கையைச் சுதந்தர நாடாக்கவேண்டும் என்ற எண்ணம் ஷை கவண்திஸ்ஸாவின் மகன் தூதுகுமுனுவுக்கு ஏற்பட்டது. எனினும் அவனது தகப்பன் அதற்கு உடன்படவில்லை. இதே விஷயமாய் இவன் தியானம் செய்துகொண்டிருக்கையில் தேவசேனாபதியான கதிர்காமத்தானுடைய உத்தரவும் உதவியும் இல்லாமல் இப்பெருங் காரியத்தில் இறங்கவேண்டாம் என்று கனவு கண்டதாகவும் அக் கனவின் பிரகாரம், தூதுகுமுனு கதிர்காமத்திற்கு தனது 10 நண்பர்களுடன் சென்று தவம் புரிந்ததாகவும் சொல்லப்படுகிறது. கதிர்காமத்தில் மாணிக்க கங்கைக் கரையில்

14 நாள் கடுந்தவம் புரிந்தபோது கந்தபிரான் பண்டார வேடம் பூண்டு தரிசனம் கொடுத்தாராம். பண்டாரமாக வந்த பெரியாரைக் கண்டு பயந்து, அவரது அடிபணியும் சமயம் மூர்ச்சையானதாகவும், பிறகு மூர்ச்சை தெளிந்து கண் விழித்ததும், தேவசேனபதி உருவத்தில் தூதுகுமுனுவுக்கு காட்சி கொடுத்து தனித்து நின்று போர்செய்ய, ஏலேலசிங் கத்தை தனது வேலாயுதத்தால் வெல்லக்கடவாய் என்று ஆசீர்வாதம் கொடுத்தருளி மறைந்ததாகச் சொல்லப்படு கிறது.

தூதுகுமுனுவும் தனது பரிவாரங்களுடன் அனுராதபுரம் சென்று நேருக்குநேர் செய்த யுத்தத்தில் ஏலேல சிங்கத்தை வென்றதாகவும் சரித்திரம் கூறும். தனக்கு வெற்றி யளித்த கந்தபெருமானுக்கு கோவிலும் கட்டுவித்து, நித் திய பூஜைக்காக ஏராளமான காணி பூமிகள் மான்யம் விட்டதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமான விஷயங் கள் மகாவம்சத்தில் காணப்படவில்லை. தூதுகுமுனுவின் சரித்திரத்திலும் காணவில்லை.

கந்தப் பெருமானின் வழிபாடு கதிர்காமத்தில் ஏற் பட்டது சமீபகாலந்தான் என்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். தமிழ்ப் புராணங்களிலும், சிங்களக்கிரந் தங்களிலும் கதிர்காமத்தில் கந்தப்பெருமான் திருவிளை யாடல்களைப் பற்றிக் குறிப்பிடுவது சமீபகாலத்திய நூல் களில்தான்.

"கதிர்காம தேவியோ" என்று கொண்டாடுவது கந்தப் பெருமானை யல்ல வென்பது சிலர் கொள்கை. ஏனெனில் "கதிர்காம தேவதையைப்" பற்றி சிங்களவர்கள் கூறும் சில சம்பவங்கள், இந்தியாவில் கந்தபெருமானைப்பற்றிக் கூறும் சம்பவங்களுக்குச் சம்பந்தப்பட்டதாக வில்லா ததே காரணம். இலங்கையில் காவல் தெய்வமாய்க் கொண்டாடப் பெறும் நான்கு தெய்வங்களுள் "கதிர்காம

தெய்வமும்'' ஒன்றென்றும், அது வருங்காலத்தில் புத்தரின் ஓர் அவதாரமாகத் தோன்றும் என்பதும் சிங்களவர் கொள்கை.

கதிர்காமத்தில் சுப்பிரமணியக் கடவுளை சம்பந்தப் படுத்தக் கூடிய யாதொரு கல்வெட்டுகளோ அல்லது இதர சின்னங்களோ கிடைக்கவில்லை. சுப்பிரமணியக் கடவுளின் காலம் கலியுகத்திற்கு முந்திய காலம் என்று இந்துக்கள் கொள்ளுங் காரணத்தால் அச்சின்னங்கள் மறைந்தும் இருக்கக்கூடும்.

தற்காலம் கதிர்காமத்தில் கட்டப்பட்டுள்ள கோவில்கள், செங்கல், சுண்ணாம்பு கொண்டு கட்டப்பட்டவையாகக் காணப் படுகின்றன. ஆகவே அவை சமீப காலத்தில் உண்டானவையென எண்ண இடமுண்டு. மிகவும் புராதனமாகக் கருதப்படும் வெள்ளரசு மரத்தடியில் காணப்படும் புத்த விக்ரகமும் நவீன விக்ரகந்தான். சரித்திரக்காரர்களின் ஆராய்ச்சி இவ்விதமிருக்கப் புராணக் கதைகளைப்பற்றிக் கவனிப்போம்.

## அத்தியாயம் 3

# கதிர்காமமும் - புராணங்களும்

சுப்பிரமணியக் கடவுள் வள்ளியைக் கலியாணம் செய்தது தென் இந்தியாவில் வள்ளியங்கிரியில் என்பது கந்த புராணத்தின் பாடம். வள்ளியை இலங்கையில் கதிர்காம க்ஷேத்திரத்தில் கலியாணஞ் செய்ததாக ஐதிகமும் உண்டு! வள்ளியம்மையார் தினைப்புனங்காத்த இடம் இது. கந்தன் வேங்கை மரமாக மாறிய இடம் இது என்று பல விதமாகக் கூறப்படும் இடங்களும் உண்டு. இந்து புராணங்களில் கதிர்காமத்தைப் பற்றிக் குறிப்பிடும் புராணம் தக்ஷிண கைலாய மான்மியம் என்பதாகும். இது சம்ஸ்கிருதத்திலுள்ள "ஸ்கந்த புராணத்"தின் பகுதி என்பார்.

சூரபத்மனும் அவனது தம்பிமார்களும் தேவர்களுக்குச் செய்து வந்த கொடுமைகளைக் கேட்டு, கந்தபிரான் கதிர்காமம் வந்து, அங்கு தம்முடன் வந்த சைந்நியங்களுக்குப் படைவீடும் அமைத்துத் தங்கியதாகவும், பிறகு வீரவாகு தேவரை சூரபத்மனிடம் தூது அனுப்பியதாகவும் சொல்லப்படுகிறது. இதன் பிறகு சூரபத்மன் வதம் வரை இதுவே கந்தபிரானின் படை வீடாகவிருந்த தென்பர்.

சூர சம்ஹாரம் ஆனபிறகு கதிர்காமத்தில் ஓர் நகரத்தையும், அதில் ஒரு கோயிலைத் தனக்கும் அமைத்துக் கொண்டு தங்கியிருந்ததாகவும் கூறுவார்கள். கதிர்காமத்தைச் சுற்றிலும் இது வீரவாகு மலை, இது பிள்ளையார் மலை, வள்ளியம்மன் மலை, தெய்வயானையம்மன் மலை எனப் பல குன்றுகளுக்குப் பெயரும் கொடுக்கப் பெற்றிருக்கிறது.

தற்காலம் உள்ள பெரிய கோவிலே "**ஜோதி மண்டபம்**" எனப்படுவதாகும். இது சுப்பிரமணியக் கடவுளின்

சந்நிதியாகும். அதற்கு அடுத்தாற்போல் பிள்ளையார் சந்நிதியும், மறுபக்கத்தில் தெய்வயானையம்மன் சந்நிதியும், பெரிய சந்நிதிக் கெதிரில் வள்ளியம்மன் சந்நிதியும் இருக்கின்றன. இக்கோயில்கள் எல்லாம் நவீன முறையில் கட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம்.

பெரிய சந்நிதி விஸ்தாரமான கோவில் அல்ல. சுமார் 50 அடி நீளம், 20 அடி அகலம், 15 அடி உயரமும் உள்ளது. வெளிப் பாகம் பக்தர்கள் நின்று ஆராதிக்கும் மண்டபம். இரண்டாவது அறையில் ஜன்னல் முதலியன கிடையாது. கோவில் பூசாரிகளான கபுராளமார்கள் அந்த இரண்டாவது இடம் வரையில் போகலாமாம். வெளி மண்டபத்திலிருந்து இரண்டாவது பாகம் போகும் வாயற்படியில் **சுப்பிரமணியக் கடவுளின்** உருவம் எழுதப்பெற்ற திரை ஒன்று இருக்கும். இவ்விதத் திரைகள் பல பக்தர்களால் நேத்திக் கடனாகக் கொடுக்கப்பட் டிருக்கின்றன. மூன்றாவது பாகந்தான் மூல பீடம். அதில் ஒருவரும் போனதில்லையென்பார்கள். அங்கு விக்கிரகம் இல்லையென்பார்கள் பலர். அங்கு இயந்திர ஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதாகக் கூறுவர்.

புராணத்தைப் பற்றி மறுபடியும் ஆராய்வோம். சூரபத்மனைக் கொன்று கதிர்காமத்தில் ஆலயம் உண்டாக்கி, அதில் சுப்பிரமணியக் கடவுள் வீற்றிருந்து தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், பூதர்களுக்கும் தரிசனம் கொடுத்து, அவரவர்கள் வேண்டிய வரன் கொடுத்தார். இவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கியே **மாணிக்க கங்கை** எனும் நதியை வீரவாகு தேவரைக் கொண்டு ஏற்படுத்தினர் என்றும் புராணம் கூறுகிறது.

சூரசம்ஹாரம் செய்து தேவர்களின் கலி தீர்த்த கந்தப் பெருமானுக்குத் தனது மகள் **தெய்வயானையைக்** கலியாணம் செய்துகொடுக்க **தேவேந்திரன்** விரும்பியதாகவும், அவ்விருப்பத்திற் கிணங்கி **கந்தவேளும்** தனது பரி

வாரங்களுடன் திருச்செந்தூர் சென்று, அங்கிருந்து திருப்பரங்குன்றம் போய் தெய்வயானையைக் கலியாணம் செய்ததாக ஐதிகம். திருப்பரங்குன்றத்தில் சிறிது காலந்தங்கியபின் நாரத முனிவர் சூழ்ச்சியால் வள்ளியங்கிரியை அடைந்து அங்கு வள்ளியைக் கலியாணம் செய்தாராம். அங்கு சில காலம் தங்கிப், பிறகு கதிர்காமத்தின் பெருமையைக் கேள்விப்பட்ட வள்ளி தெய்வயானை அம்மையார்கள் அங்கு தாங்களும் வரவேண்டும் என்று சொல்லியதற்கேற்ப சுப்பிரமணியக் கடவுள் வள்ளியங்கிரியை விட்டு ஈழ நாட்டுக்குப் புறப்பட்டார்.

கீழ்க்கடலை யடைந்ததும் தானும் தனது பரிவாரங்களும் சமுத்திரத்தைக் கடக்கவேண்டி ஒரு பெரிய மரக்கலம் ஒன்றை நிர்மாணிக்கும்படி விஸ்வகர்மாவிற்கு உத்தரவிட, அவரும் அவ்விதமே செய்துமுடித்தார். அம் மரக்கலத்தில் ஏறிக் கடல் கடக்க, ஈழ நாட்டின் வட கோடியில் ஓர் துறைமுகத்தில் அக்கப்பல் சேர்ந்தது. அதுதான் காங்கேயன் துறை என்பார்கள்.

அங்கிருந்து ஈழ நாட்டில் பலவிடங்களையும் சுற்றிக் கொண்டு கடைசியாக வள்ளி தெய்வயானை சமேதராக கதிர்காமக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்பது தக்ஷிண கைலாய மான்மியத்தின் சுருக்கம். இதினின்றும் வள்ளி நாச்சியார் கலியாணம் கதிர்காமத்தில் அல்லவென்பதும், தென் இந்தியாவில் வள்ளியங்கிரியில் தான் என்பதும் விளங்கக் கூடியதாக விருக்கிறது.

இந்து மத புராணங்கள் இவ்விதமிருக்க, சிங்கள புராணங்கள் என்ன சொல்லுகின்றன வென்பதைக் கவனிப்போம். இலங்கைச் சரித்திரம் "மஹா வம்சம்" என்ற நூலில் உள்ளது. புராதன காலத்தைப்பற்றிக் கூறுமிடத்து கதிர்காமத்தைப்பற்றி இந்த நூலில் அதிகம் கூறப்படவில்லை யென்பது தெரிகிறது. புத்தமத சம்பந்தமான சில குறிப்புகள் மாத்திரம் உண்டு. இந்து மதசுப்பிர

மணியக் கடவுளின் வழிபாடு எப்பொழுது யார்காலத்தில் ஏற்பட்டது என்பதை நிர்ணயிக்க முடியவில்லை.

கந்த பெருமானின் சரித்திர வரலாறு சிங்களத்தில் "கந்தகுமர உபத" என்ற நூலில் காணலாம். இது கந்தன் உற்பத்தியைப்பற்றிச் சொல்லும் நூல் என்பர். மகா வம்சம்போல் சரித்திர ஆதாரங்கொண்ட நூல் என்று சிங்களவர் ஏற்பதில்லை. தூதுகுமுனு ஏலேலசிங்கத்தைத் தோற்கடிப்பதற்காக கந்தபிரானை வேண்டி அருள் பெற்ற கதை இந்த நூலில் உள்ள விஷயம்.

சிங்கள மன்னர் புத்த சமயத்தினர் எனினும் அவர்கள் கலியாணம் செய்த மாதேவிமார் தமிழ் நாட்டு அரச வம்சத்தினர். அக்காரணம் பற்றியும் அவர்களுடைய வழிபாட்டைக் கருதியும், இந்து தெய்வங்களான பிள்ளையார், சுப்பிரமணியக் கடவுள், மகாவிஷ்ணு, பத்தினிக் கடவுள் முதலியவர்களுக்கும் இலங்கையில் இடம் கிடைத்ததெனல் வேண்டும்!

தஞ்சாவூரை யாண்ட முதலாம் இராஜராஜன், அவன் மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் மறுபடியும் இலங்கை சோழ மன்னர் கையில் அகப்பட்டு ஆளப்பட்டு வந்ததற்கு ஆதாரங்களுண்டு. இக்காலத்திலும் சிங்களவர் வட இலங்கையைவிட்டு தென் இலங்கையில் ஆட்சி செலுத்தி வரலாயினர். சிங்கள மன்னர் பரம்பரையில் தோன்றிய மானவர்மன் என்ற அரசன் மறுபடியும் சோழ மன்னரை இலங்கையைவிட்டு வெளியேற்ற கதிர்காமத் தெய்வத்தின் உதவியை நாடியதாகத் தெரிகிறது.

மாணிக்க கங்கையின் முகத்துவாரத்தின் அருகில் ஓர் இடத்தில் சுப்பிரமணியக் கடவுளின் ஷட்கோண இயந்திரம் ஸ்தாபித்து ஜபம் செய்யத் தொடங்கியதாகவும், அச்சமயம் முருகக் கடவுள் மயில் வாகனத்தில் வந்து மானவர்மனுக்குக் காட்சி கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது.

காட்சி கொடுத்த சமயம் முருகப் பெருமானுக்கு சோட சோபசாரம் செய்து அவருடைய வாகனமான மயூர தேவருக்கும் உபசரிக்கையில், அவருக்காக வைத்திருந்த இளநீர் ஒழுகிப் போய்விட, இன்னது செய்வது என்றறி யாது தனது கண்களில் ஒன்றை இளநீராகப் பாவித்து மயூர தேவருக்குக் கொடுத்ததாகவும், அது கண்டு கந்தவேள் அவனது பக்தியை வியந்து அவன் வேண்டிய வரங்களை கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது.

இவன் கந்தன் அருள் பெற்று ஊர் திரும்பியதும், இவனுக்கு முடிசூட்ட சுற்றத்தாரும் பிரபுக்களும் எண்ணு கையில், கண்ணிழந்த நான் அந்த பதவிக்குத் தகுதியில்லை யெனத் தன் தம்பிக்கு அவ்வரசைக் கொடுத்தானும். நாளடைவில் கந்தபிரான் அருள் பிரகாரமே சோழ மன்னர் களுடைய உபத்திரவம் நீங்கி இலங்கை சிங்களவர் ஆட் சிக்கு வந்தது எனக் கூறப்படுகிறது.

கதிர்காம க்ஷேத்திர வழி பாட்டிலும், திருப்பணி வேலையிலும் அதிகமாய் ஈடுபட்டிருந்த சிங்கள மன்னன் முதலாவது இராஜசிங்கன் ஆவார். இவரது காலம் 16 வது நூற் ருண்டின் பிற்காலம். (கி. பி. 1581). இம்மன்னன் புத்த வேதத்திலிருந்து சிவனடியாராக மாறியதாகவும், கதிர் காமத்திற்குத் திருப்பணிகள் செய்ய ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது. இது சரித்திரத்திற்குப் பொருத்தமாக வும் உள்ளது. இந்த இராஜசிங்கன் காலத்தில்தான் கதிர் காமத்தில் தெய்வயானையம்மன் சந்நிதி கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இதற்குக் காரணமாயிருந்த முத்துலிங்க சுவாமி வரலாற்றைச் சிறிது கவனிப்போம்.

அத்தியாயம் 4

# கல்யாணகிரியும் அவரது பிற்காலமும்

முதலாவது ராஜ சிங்கன் புத்தமதம் விட்டு இந்து மதம் கைக்கொண்டான் என்ற செய்தி இந்தியாவில் பரவியது. சிருங்கேரி சங்கராச்சாரியார் மடத்தைச் சேர்ந்த கல்யாணகிரி யென்ற சந்நியாசி இலங்கைக்கு வந்தார். இவர் பிராமண சந்நியாசி. தசநாமிகள் என்று சொல்லப் படும் வகுப்பில் "கிரி" என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர். இந்தியாவில் தெய்வயானை அம்மையாரை விட்டு இலங் கையில் வள்ளிநாச்சியாருடன் சந்தோஷத்தோடு இருப் பதைசகியாதவராக, கந்தப்பெருமானை இந்தியாவிற்கு அழைத்துப் போகும் நோக்கமாய், கதிர்காம க்ஷேத்திரம் அடைந்து அங்கே தபசு புரிந்ததாகச் சொல்லுவார்கள். இவர் தபஸ் தொடங்கிய காலம் முதல் அவருக்கு அருகி லிருந்து குற்றேவல் செய்து வந்தவர் ஒரு வேடுவச் சிறுவ னும் சிறுமியும் ஆவார். இவ்விதமாகச் சுமார் 12 வருஷ காலம் தபஸிலிருந்தும் தனக்கு முருகக் கடவுள் தரிசனம் கொடுக்காததைக் கண்டு, மனச்சோர்வடைந்து, மயங்கி நித்திரையில் ஆழ்ந்தார். இத்தூக்கத்தின் மத்தியில் அவ் வேடுவச் சிறுவன் அவரைத் தட்டி யெழுப்பிவிட்டான். அதுவுமல்லாமல் கோபம் கொண்டெழுந்தவருக்கு மேலும் கோபம் வரும்படியாக பரிகாச வார்த்தைகளைச் சொல்ல அச்சிறுவனைத் துரத்திக்கொண்டோடத் தொடங் கினர். கல்யாணகிரியும் அவ்வேடுவச் சிறுவனும் சிறுமி யும் மாணிக்க கங்கைக்கரையை யடைந்ததும், அங்கே முருகனும் வள்ளியுமாகக் கல்யாணகிரிக்குக் காட்சி கொடுத்தார் கள். அவர்களைப் பணிந்து தான் இலங்கைக்கு வந்த நோக்கத்தைத் தெரிவித்து தன்னுடன் பாரத நாட்டிற்கு

காலத்தில் அதாவது சுமார் 1870-ம் வருஷம் சுரராஜபுரி என்பவர் காஷ்மீர தேசத்தினின்றும் கதிர்காமத்தை நாடி வந்தார். வரும் வழியில் ராமேஸ்வரம் சேர்ந்தார். அங்கிருந்த நாளில் அவரை சிவனடிபாதம் வரும்படியாக சொற்பனத்தில் அழைப்பு வந்தது. அங்கு வந்து சில காலம் தங்கிய சமயம், சிவனடிபாத மலைச் சாரலில் வெகு காலமாய் அன்ன ஆகரரமில்லாமல் தபஸு செய்துகொண்டிருக்கும் தொண்டனைத் தேடி அவனைக் கதிர்காமத்தில் சேர்க்கவேண்டும் என்று அவருக்கோர் உத்தரவு சொற்பனத்தில் ஏற்பட்டது. இவ்வுத்தரவிற் கிணங்கி சுரராஜபுரியும் கேசோபுரி சுவாமியை சிவனடிபாத மலைச்சாரலில் கண்டார். தான் வந்த காரியத்தை அவரிடம் கூறி அவ்விருவரும் கதிர்காமத்தை யடைந்தார்கள்.

50 வருஷ காலம்வரை அன்ன ஆகாரம் இல்லாது தபஸு செய்துவந்த காரணத்தால் அன்னம் சாப்பிடுவது அவருடைய சரீரத்திற்கு ஒவ்வாமல், பால் மாத்திரம் சாப்பிடும் முறையைக் கைக்கொண்டிருந்தார். இவர் பாலே சாப்பிட்டு வந்த காரணம் பற்றி இவருக்குப் பால் குடிபாவா வென்ற பெயரும் ஏற்பட்டது. இவர் 1898-ம் வருஷம் சமாதி யடைந்தார். கல்யாண மண்டபம் நிர்வாக முறைக்காக ஒரு மரண சாசனம் ஒன்று எழுதி வைத்துள்ளார். இந்த சாசனம் சர். பொன்னம்பலம் அருணசலம் அவர்கள் ரிஜிஸ்திரார் ஜனரலாயிருந்த காலத்தில் நடைபெற்றது.

இப்பெரியாரிடமிருந்து சர். அருணசலம் அவர்கள் கேட்டறிந்தவற்றை அவருடைய "முருகன் வழிபாடு" என்னும் வியாசத்தில் குறிப்பிட்டுள்ளார். அங்கு கண்டவற்றையே ஆதாரமாகக் கொண்டு இது எழுதப் பெற்றது.

---



Copy right Govt. Tourist Bureau

திஸ்ஸமராமை டகோபாவும் — கதிர்காமம் போகும்பாதையும்



Copy right Govt. Tourist Bureau

கதிர்காம க்ஷேத்திரத்தில் காவடி எடுக்கும் பக்தன்

அத்தியாயம் 5

## தற்கால நிலை

கதிர்காம க்ஷேத்திரத்தின் ஆலயத்தில் விக்கிரகம் இல்லையென்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். ஏற்கனவே விக்கிரகம் இருந்ததென்றும், இப்பகுதிகளில் படையெடுப்பும் கலகமுமாகவிருந்த காரணத்தால் விக்கிரகத்தை எங்கேயோ கொண்டு ஒளித்துவிட்டார்கள் என்று டாக்டர் டேவிஸ் என்பவருடைய குறிப்பில் காணக்கிடக்கின்றது. அவர்கள் ஒளித்தார்களோ இல்லையோ, அதை அறியக்கூடவில்லை. இவ்விதக் குறிப்புகளினின்றும் கதிர்காமத்தில் விக்கிரகம் இருந்ததாக சரித்திர ஆராய்ச்சி கொண்டோ அல்லது வேறு வகையிலோ நிரூபிக்க முடியாதிருக்கிறது. கதிர்காமத்தானிடம் சிங்களவர்களுக்கு பக்தியைவிட பயமே அதிகம். கதிர்காமத்தான் படத்தை எழுதிக்காட்டவும் பயப்படுவார்கள் என்று காப்டன் நாக்ஸ் என்பவர் சொல்லியது உண்மையே!

இதற்குமுன் கதிர்காம சரித்திர வரலாற்றைப் படித்தவர்களுக்கு ஓர் விஷயம் விளங்கும். பூர்வ காலத்தில் கதிர்காமம் இந்து மத ஸ்தலமாக விளங்கவில்லை யென்பதும், சிங்களவர்களுக்கும் சோழ மன்னர்களுக்கும் நடைபெற்ற யுத்த களங்களில் பிரதானவிடமாகவிருந்த தென்பதும் ஆகும். இரண்டாவதாக, முதலாம் இராஜசிங்கன் என்ற அரசன் இந்து மதத்தை தழுவியதும், அச்சமயம் கலியாணகிரி வந்து கலியாண மண்டபம் ஸ்தாபித்து, மூலஸ்தானத்தில் இயந்திர ஸ்தாபிதம் செய்து திருப்பணி வேலைகளை அரசன் உதவி கொண்டு நடத்தி வந்ததோடு இந்த க்ஷேத்திர நிர்வாகத்தை அவரே நடத்தி வந்திருப்பதும் தெரிகிறது. அவருக்குப் பிறகும் அவர் பின் தோன்

றியவர்களும் அவ்வித நிர்வாகத்தை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். கண்டி மன்னனை பிரிட்டிஷ்காரர்கள் நாடு கடத்திய பிறகு, ஊவை மாகாணத்தில் சிங்களவர்கள் கலகம் செய்து கோவில் ஆராதனை வேலையை இந்துக்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஊன்றிய பிறகு 1815 ம் வருஷம் சிங்களப் பூசாரிகள் பெரிய கோவில் பூசையிலிருந்து அரசினரால் விலக்கப்பட்டு வள்ளியம்மன் கோவில் பூசையோடு மாத்திரம் இருந்து வந்தார்கள். நாளடைவில் சிங்கள நாடான காரணத்தாலும், அங்கிருந்த கோவில் மடாதிபதிகள் தனிக் குடிகளாக விருந்தபடியாலும் போலீஸ், நீதி ஸ்தலம் முதலியன அவ்விடம் இல்லாதிருந்தமையாலும், அப்பகுதியிலுள்ள ஸ்தல அதிகாரிகள் எல்லோரும் சிங்களவர்களாயிருந்தபடியாலும், நாளடைவில் சிங்களப் பூசாரிகள் பெரிய கோவில் பூசையையும் அதிக்கிரமத்தில் பிடுங்கிக் கொண்டார்கள். மடாதிபதிகளும் ஒன்றும் செய்து கொள்ளமுடியாது போயிற்று. இந்து கோவில் பரிபாலன விஷயமாய்ப் பிரத்தியேகச் சட்டம் இந்நாட்டில் இல்லை. புத்த மதக் கோவில்களுக்குரிய சட்டம் இதற்கும் உரியதென சிங்கள அதிகாரிகள் சொத்து பரிபாலனத்தை மேற்கொண்டு அவர்கள் இஷ்டப் பிரகாரம் காணிகளை விற்பதும், வருமானங்களைச் செலவிடுவதுமா யிருக்கிறது.

ஆடித் திருநாள் கர்லத்திலும், கார்த்திகைத் திருநாள் காலத்தும் ஏராளமான பணம் உண்டியல்களில் வந்து விழுகின்றது. இவ்விதம் உண்டியல்களுக்குப் பணம் போடுபவரைக் கவனித்தால் 100-க்கு 90 பேர் தமிழர்களாகவே இருப்பார்கள். இந்துக்களால் பொருள் கொடுக்கப்பட்டு, இந்துக்களால் சேவை செய்யப்பட்டு வரும் இக் கோயில் நிர்வாகம் இந்துக்களிடம் இருக்கவேண்டும் என்பது எல்லா இந்துக்களுடைய அபிப்பிராயம். இந்தியாவில் புத்தகயா நிர்வாகம் இந்து மஹந்துவிடம் இருக்கிறது என்பதைப் பற்றி இலங்கைச் சிங்களவர் கிளர்ச்சியாரம்பித்த

காலத்தில் இலங்கையிலும் கதிர்காமம் இந்துக்களிடம் வர வேண்டும் என்ற கிளர்ச்சி ஏற்பட்டது. இந்து மக்களுள் இக் கிளர்ச்சிக்குப் போதிய நல்லெண்ணம் இருந்தும் அது வெளிவந்த பாடில்லை. இக்காரணம் பற்றியே இக் கோவில் உண்டியல்களில் பணம் போடப்படாது எனக் கிளர்ச்சி சில வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. திருவிழாக் காலங்களில் துண்டுப் பிரசுரங்களும், பிரசங் கங்களும் பல தமிழன்பர்கள் இந்த உண்டியல் சம்பந்த மாய் நடைபெறுகின்றன.

இக்கோயில்களின் வருமானம் ஏராளமாக விருந்தும் சரியான முறையில் நிர்வகிக்கப் படவில்லை யென்பதை யாவரும் அறியக்கூடும். இதைச் சிங்களவர்களும் ஏற்றுக் கொள்ளுவார்கள்.

கதிர்காம உற்சவம் **கலியாணகிரி** காலம் முதல் நடந்து வந்திருக்கிறது எனல் வேண்டும். அக் காலங்களில் மிகவும் சொற்பப் பிரயாணிகள்தான் வந்துகொண் டிருந்தார் கள். ஆனல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வியாபாரப் பெருக்கு ஏற்பட்டு **நாட்டுக்கோட்டை நகரத்தார்**களும் தென் நாட்டுத் தமிழர்களும் கொழும்பிலும் மற்றப் பாகங்களி லும் குடியேறிய பிறகு கதிர்காமப் பிரயாணம் அதிக மாகத் தலைப்பட்டது எனலாம். அக்காலத்தில் — சுமார் 90, 95 வருஷங்களுக்கு முன்னர் — கொழும்பிலிருந்து நகரத்தார்கள் கதிர்காமத்திற்கு வேல் கொண்டுபோய் செலுத்துவார்கள். அதுபோல் தென் இந்திய இதர தமிழ் வியாபாரிகளும் காவடி கொண்டுபோய்ச் செலுத்துவார் கள். இவர்கள் வேலையும், காவடியையும் கூட்டமாக எடுத் துக்கொண்டு, கால் நடையாகப் பிரயாணம் செய்து, கதிர் காமத் தீர்த்தத்திற்கருகிருந்து தரிசித்து, பிறகு கொழும் புக்குத் திரும்புவார்கள். இவ்வாறு சென்றவர்களில் மலைக் காய்ச்சல் கண்டு இறந்தவர் அநேகர். அவ்விதம் போவ தில் அநேகக் கஷ்டங்களும் நஷ்டங்களும் இருந்தபடியால்,

ஆடி மாதம் கதிர்காமம் கொண்டு சென்ற வேலையும் காவடியையும் கொழும்பு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைக் கோவிலோடு நிறுத்திக் கொண்டார்கள்.

கதிர்காம ஆடி உற்சவம் 14 நாள். அதே காலத்தில் கொழும்பில் ஆடி வேல் உற்சவம் வெகு குதூகலமாக நடைபெறுகிறது. செட்டித் தெருவிலிருந்து வேல் ரதமும், சம்மாங்கோட்டிலிருந்து காவடி ரதமும் வெள்ளவத்தை போய் கடைசி 3 நாள் தங்கித் திரும்பும். வெள்ளவத்தையிலும் பம்பலப்பிட்டியிலும் இச்சமயம் கொண்டாட்டமாகத்தா னிருக்கும். இந்த வேல் உற்சவத்தைக் காண அநேகர் இந்தியாவிலிருந்து வருவார்கள். கதிர்காமம் உற்சவத்தைப்பற்றி சுமார் 70 வருஷங்களுக்கு முன் இருந்த ஊவை கவர்ன்மெண்ட் ஏஜண்டு பின்வருமாறு எழுதுகிறார்.

"ஆடி அமாவாசையில் ஆரம்பித்து பௌர்ணமி முடிய 14 நாள் உற்சவம் நடக்கும். இது வள்ளியம்மை கலியாண சம்பவ சம்பந்தமாய் நடக்கும் உற்சவம். உற்சவம் ஆரம்பித்து 1 வாரம் வரையில் ஊர்வலம் அவ்வளவு நன்ருக விராது. கூட்டமிருக்காது. கொழும்பிலிருந்து வேல்-காவடி வந்த நாளிலிருந்து—அதாவது இரண்டாவது வாரத்திலிருந்து—கூட்டம் அதிகரித்துக் கொண்டேயிருந்து கடைசி நாளைக்கு முன் இரவு மிகவும் நெருக்கடியானதாகவிருக்கும். இன்றைக்குத்தான் கோவிலின் வடபாகத்தில் உள்ள விஹாரைக்கு சுவாமியைக் கொண்டு செல்வார்கள். மறுநாட் காலையில் தீர்த்தம்—"

கதிர்காம க்ஷேத்திரத்திற்கு வருபவர் காணவேண்டியவை யென்னவென்பதைச் சொல்லிவிடுவோம். பெரிய கோவில், பிள்ளையார் கோவில், தெய்வயானையம்மன் கோவில் அடுத்தடுத்து ஓரிடத்தில் இருக்கின்றன. பெரிய கோவிலுக்குப் பின் பத்தினியம்மன் கோவில் ஒன்றுண்டு. வேறு சில்லறைக் கோவில்களும் உண்டு. வெள்ளரசு

மரமும் புத்தர் சந்நிதியும் பெரிய கோவிலின் பின்புறத்தில் காணலாம்.

பெரிய கோவிலின் எதிர்ப்பக்கத்தில்—அதாவது சுவாமி ஊர்வலம் செய்யும் தெருக்கோடியில் வள்ளியம்மன் சந்நிதி யுண்டு. வள்ளியம்மன் சந்நிதிக்கருகாமையில் முத்து லிங்கசுவாமி சந்நிதி. இவை நீங்கலாக இந்த தெருக்களில் உள்ள பல மடங்களிலும் பல கோவில்களை வைத்துக்கொண்டு ஆங்காங்கு வருபவர்களிடம் உண்டியல் வசூல் செய்து வருகிறார்கள். கதிர்காமத்தில் நடக்கும் சுவாமி ஊர்வலத்தில் ஓர் விசேஷம். எண்ணெய் தீவர்த்திகள் (தீவட்டிகள்) கிடையாது. பக்தர்கள் புதுச்சட்டி வாங்கி, அதில் வீபூதியை நிரப்பி, கற்பூரம் கொளுத்திக் கொண்டு சுவாமியோடு செல்வார்கள். இந்த வெளிச்சந்தான் ஊர்வலத்திற்குள்ள வெளிச்சம். கோவிலுக்குப் போகிறவர்களும் தங்களாலான அளவிற்குக் கற்பூரம் வாங்கி, எல்லாக் கோவில்களிலும், அதற்கென வைக்கப்பட்டு எறிந்துகொண்டிருக்கும் கற்பூரத்தோடு சேர்ப்பார்கள். பெண்கள் மாவிளக்கு போடுவார்கள். இதற்குத் தேனும் தினைமாவுந்தான் உபயோகிப்பார்கள். தினைமாவும் தேனும் வாங்க வசதிகள் உண்டு.

சுவாமி தரிசனம் முடிந்ததும், **கதிரைமலைக்குப் போவார்கள்.** இது கதிர்காமத்திலிருந்து 4-5 மைல் தூரத்தில் உள்ளது. எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று கேட்டால் "அரோகரா தெரியாது" "வாருங்கள் போகலாம்" என்று சொல்லுவார்கள். ஒருவரை ஒருவர் அவ்வூரில் அழைப்பதென்றாலும் "அரோகரா வாருங்கள்" "அரோகரா சாப்பிடுங்கள்" என்பதாக, எவ்வித வார்த்தைக்கும் "அரோகரா" என்ற பதம் உபயோகிப்பார்கள். கதிரமலைக்குப் போக எண்ணுபவர்களுக்கு, இரவில் சொற்பனத்தில் கதிர்காமத்தான் உத்தரவு கொடுப்பார் என்றும், அந்த உத்தரவு கிடைத்துத்தான் போகவேண்டும் என்றும்

பேசிக்கொள்வார்கள். சொற்பனத்தில் அழைக்கப்படாத வர்கள் போனல், திரும்ப வரமுடியாமல், வழிகெட்டு காட்டில் அலேவார்கள் என்றும் சொல்லக் கேட்டதுண்டு. ஜனங்கள் எந்நேரமும் காலே முதல் மாலேவரை நடமாடிக் கொண்டிருப்பதால் அவ்வித சிரமங்கள் இருக்க இட மில்லே. கதிரைமலேயென்பது ஓர் சிறு குன்றம். அதன் உச்சியில் ஓர் வேலாயுதம் உண்டு. அங்கு போய் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்துவதுதான் வழக்கம். கதிரை மலே தரிசனத்திற்குப் பிறகு வருகிற பாதையில் விபூதி மலே யென்பதுண்டு. கதிர்காமத்தில் உபயோகிக்கப் பெறும் வீபூதி இவ்விடத்தில் வெட்டியெடுக்கப் படுவது தான். நல்ல வெள்ளேயாகவிருக்கும். இங்கிருந்து வெட்டி யெடுத்து, இடித்து, உற்சவகாலங்களில், படிக்கணக்காக யாத்ரீகர்களுக்கு விற்பனே செய்யப்பட்டு வருகிறது.

இவ்விரண்டு இடங்கள் தவிர செல்லக்கதிர்காமம் என்ருேர் இடம் உண்டு. இது சுமார் 3 மைல் தூரத்தில் உள்ளது. நல்ல யானேக் காட்டின் நடுவேயுள்ளது. இந்த விடத்தில் உற்சவ காலங்கள் தவிர வேறு காலங்களில் ஜனப்போக்கு வரத்து இருக்காது. தழை முட்செடிகளின் ஊடே போகவேண்டிய இடம். வண்டியில் சென்ருல் கூண்டின்மேல் முட்கிளேகள் இழுக்கப்பட்டு வருவதைக் கவனிக்கலாம். உற்சவகாலத்தில் இக்கிளேகளே வெட்டி ஜனநடமாட்டத்திற்கு வசதியாக அரசினர் செய்து வைக் கிருர்கள். இந்த இடத்தில் ஓர் பிள்ளேயார் கோவில் உண்டு. அதற்கு **ஆள் காட்டிப் பிள்ளேயார்** என்று பெயர். இது ஒரு ரமணீமயமான இடம். இவ்விடத்தில் **மாணிக்க கங்கை** சல சலவென்று யாதொரு களங்கமும் இல்லாமல் கற்பாறைகளின்மேல் ஓடுகிறது. தண்ணீர் மிகவும் தெளி வாயுள்ளது. காட்டு மிருகங்கள் தண்ணீர் குடிக்க இவ் விடத்தை நாடுவது நியாயமே. ஜனங்கள் இங்கே ஸ்நா னம் செய்து பிள்ளேயார் தரிசனம் செய்து போவார்கள். வள்ளி நாச்சியார் தினைப்புனங் காத்துக்கொண்டிருக்கை


யில கதிர்காமத்தான் அம்மையாரைத் தன் வயப்படுத்த அண்ணன் கணேசரின் உதவி நாடி, அவர் யானை உருவத்தில் நாச்சியாரைப் பயமுறுத்தித் தம்பிக்கு உதவிய இட மீது என்பார்கள்.

அத்தியாயம் 6

# கதிர்காமமும் - முஸ்லீம்களும்

கதிர்காமத்திற்கு இந்திய முஸ்லீம்களில் அநேகர் வந்து போகிறார்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கையின் ஓரத்தில் ஓர் ஊற்றுண்டென்றும், அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகியவர் சிரஞ்சீவியாக விருக்கமுடியும் என்பதும் அவர்கள் கொள்கை. அவர்களுள் கிதிர்நபி என்பவர் அந்த ஊற்றுத் தண்ணீரைப் பருகி சிரஞ்சீவியா யிருந்தார் என்றும், அவரே இஸ்லாம் மார்க்கத்தை மாலத் தீவு முதலிய விடங்களில் பரப்பினர் என்றும் சொல்லப்படுகிறது. அந்த ஊற்று இருந்தவிடம் இப்பொழுது தெரியவில்லை. இவ்வூரைச் சுற்றிலும் கிணறுகளுமில்லை. ஊருக்கு வேண்டிய தண்ணீர் ஆற்றைப் பொறுத்ததுதான்.

வள்ளியம்மை கோவிலுக்கு அருகாமையில் ஒரு சிறு பள்ளியும் கட்டப்பட்டிருக்கிறது. அந்த விடத்தில் ஒரு முஸ்லீம் பெரியாரின் சமாதியும் உண்டு. அவர் முத்துலிங்க சுவாமி காலத்தவர் என்றும், அவருடைய தொண்டராயிருந்தார் என்றும் சொல்லப்படுகிறது. பெரியார்களுள் "யார் பெரியார் யார் சிறியார்"? மத வித்தியாசந் தான் ஏது?



Copy right

கதிர்காமத்தில் பெரிய கோவில்

Govt. Archeological Dept.

சிவமயம்

அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

# கதிர்காமத் திருப்புகழ்

க தனதனனன தான தனதனன தான
தனதனன தான தானத் தனதான.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக னாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமரர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி னோதப் பெருமாளே.

உ தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன தனதான.

அலகின் மாறு மாறுத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழவி கோளி நாணுது புனுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு
பருவ மேக மேதாரு வெனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி யோயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை யெரிகொள் வேலை மாசூரி
வெரியும் வேலை மாறுத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை யாறு சூழ்சீத
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள்யானை வாழ்வான
கருணை மேருவே தேவர் பெருமாளே.

---

ரு தனன தான தத்த தனதான
தனன தான தத்த தனதான

எதிரிலாத பத்தி தனைமேவி
இனியதா ணினைப்பை யிருபோதும்
இதயவாரி திக்குள் உறவாகி
எனதுளேசி றக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனகமேருமொத்த புயவீரா
மதுரவாணி யுற்றகழலோனே
வழுதுகூ னிமிர்த்த பெருமாளே.

௪ தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

கடகட வருவிகள் தபவரி யதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோடை

வடசிக ரகிரித விடுபட நடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்

அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே

இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

---

௫ தனனதன தானத்த தனனதன தான
தனனதன தானத்த தனதான தானனு.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமலைசய வீதிக்குள் மயில்போலு லாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ரூருக்கு மனுமரண மாயைக்கு
மூரியவர்ம காதத்தை யெணுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்கிரு பாசித்தம் அருள்கூர வேணுமே
இமகிரீகு மாரத்தி யநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜ ராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லத்துதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபி ராமனே.

---

சூ தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே யுதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்ருன் இருகூருச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்

சிறைச்சே வல்பெற்ருய் வலக்கார முற்ருய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரித்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோ லவிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்கா மமுற்ருர் முருகோனே.

---

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதன.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்கு மெட்ட ரிதாய
சமயபே தத்தினுக் கணுகோண மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்த நற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்சொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனே
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிச்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிர்காம மக்கிரிப் பெருமாளே.

---

வ
தானதன தத்தத்த தானதன தத்தத்த
தானதன தத்தத்த . தனதான.

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தத்த ரீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட வாசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி யுட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அக்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே.

—

௯ தனதன தத்த தனதன தத்த
தனதன தத்த தனதான.

மருவரு வெற்றி மலர்தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முதிரயா மத்தி
னிரவினால் நித்த மெலியாதே
இடருறு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடிகிமே விட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே.

---

௧0 தானதன தானத் தனதான
தானதன தானத் தனதான

மாதர்வச மாயுற் றுழல்வாரும்
வாதவமெ னுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும்
தீநரக மீதிற் றிகழ்வாரே
காதவொளி யேநற்குணசீலா
நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவஞானக் குமரேசா
தோமில் கதிர்காமப் பெருமாளே.

கக தனன தான தான தத்த தனன தான தான தத்த
தனன தான தான தத்த தனதான.

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி யேறி மேலெ றிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக மீடி சைக்கும்
விளைவி டாத தாய ருக்கு மழியாதே
விளையு மோக போக முற்றி யளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாம்வி லோச னத்தி களப மார்ப யோதரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை யருள் வோனே
அகில லோக மீது சுற்றி யசுரர் லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழ வைத்த பெருமாளே.

---